அசல் வழக்கு எண்: 191/2024

DEPOSITION OF WITNESS: P.W.1

| | |
|---|---|
| பெயர் | ராமலிங்கம் |
| தந்தை பெயர் | அப்பாசாமி பண்டிதர் |
| வயது | 51 |
| கிராமம் | கேளூர் |
| வட்டம் | போளூர் |
| தொழில் | விவசாயம் |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 11th day of February 2026

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு நிரூபண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். 12.02.1997 ம் தேதியிட்ட வாதியின் தந்தையார் அப்பாசாமி பண்டிதர் 1 ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும் 10.03.2014 ம் தேதியிட்ட வாதியின் சகோதரர் சேட்டு அவர்களின் வாரிசுகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பாக சொத்தை வாதி மற்றும் அவரது சகோதரர் பழனிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும் 14.12.2018 ம் தேதியிட்ட வாதி மற்றும் அவரது சகோதரர் பழனி இருவரும் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.3** ஆக 20.12.2023 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி தனது மருமகள் 2 ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தியுள்ள பெயரளவிலான கிரையப்பத்திரம் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகவும் 2 ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்ட கணினி பட்டா **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன். ( வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ.5 வரையிலானவை பிரதிவாதி வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) தாவாப்படி தீர்ப்பளிக்க பிரார்த்திக்கிறேன்.

குறுக்கு விசாரணை –

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |